# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.21 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | தெய்வேந்திரன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 18th day of February 2020.

முதல் விசாரணை

நான் காவல் ஆய்வாளராக பணியில் இருந்து 2011 ஆம் வருடம் பணி ஒய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 8.11.2009 ஆம் தேதி அவினாசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். அன்றைய தினம் நிலையப் பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்கள் 18 மணிக்கு திரு.ரங்கசாமி என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று, அதை அவினாசி காவல் நிலைய கு.எண்.1610/2009 சட்டப்பிரிவு 302 மற்றும் 201 இ.த.ச வாக பதிவு செய்து இருந்த முதல் தகவல் அறிக்கையின் நகலை பெற்று இவ்வழக்கை புலன் விசாரணை மேற்கொண்டேன். அன்றைய தினம் 19 மணிக்கு சாட்சிகள் பண்ணாரி, நடராஜன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தேன். அதே சம்பவ இடத்தில் 20 மணிக்கு அதே சாட்சிகளின் முன்னிலையில் கருப்பு ஷூ இரண்டு, சாக்ஸ் இரண்டு, பெல்ட் ஒன்று, எரிந்துபோன சட்டை ஒன்று, பேக்கிங் டேப் ஒன்று, எரிந்த நிலையில் இருந்த பிரவுன் கலர் வாட்டர் பாட்டில் ஒன்று ஆகியவற்றை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் அத்தாட்சி மகசரில் கைப்பற்றினேன். பின்பு அதே இடத்தில் 20 மணி முதல் 23 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகளின் முன்னிலையில் பாதி எரிந்த நிலையில் பெயர், முகவரி தெரியாத பிரேதத்தின்மீது பிரேத

விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அதன்பிறகு காவலர் எண்.1502 மூலம் பிரேதத்தை கோவை அரசு மருத்துவமனைக்கு சடலக்கூராய்வு செய்வதற்காக பாதுகாப்பில் வைக்கும்படி வேண்டுதல் விண்ணப்பம் கொடுத்து அனுப்பிவைத்தேன். அன்றைய தினம் சாட்சிகள் ஏ.ஆர்.ரங்கசாமி, செந்தில்குமார், சண்முகம், பண்ணாரி, நடராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்பு கோவை அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த பிரேதத்தை 11.11.2009 ஆம் தேதி சடலக்கூராய்வு செய்ய நடவடிக்கை எடுத்தேன். பின்பு 3.3.2010 ஆம் தேதி சடலக்கூராய்வு செய்த மருத்துவர் திரு.எட்வின்ஜோ அவர்களை சந்தித்து சடலக்கூராய்வு அறிக்கைப் பெற்று, அவரை விசாரணை செய்தேன். பின்பு 11.8.2010 ஆம் தேதி சாட்சி ராம்தாஸ் அவர்களை சந்தித்தேன். ராமதாஸ் அவரது அண்ணன் ராஜுவின் புகைப்படத்தை என்னிடம் கொடுத்தார். அந்த போட்டோவையும், சடக் கூராய்வின்போது புலன் விசாரணைக்காக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த சடலத்தின் மண்டை ஓட்டையும், சூப்பர் இம்போஸ் ஆய்விற்காக காவலர் 1947 மூலம் தடய அறிவியல் ஆய்வகம், சென்னைக்கு அனுப்பி வைத்தேன். பிறகு 12.8.2010 ஆம் தேதி காலை 8 மணிக்கு அவினாசி புது பஸ் நிலையத்தில் வைத்து எதிரிகள் வெங்கடேஷ் என்கிற வெங்கிட சுப்பிரமணி மற்றும் மணி ( ஆஜர் எதிரி ) ஆகியோர்களை சாட்சிகள் சிவாஜி (கிராம நிர்வாக அலுவலர்) மற்றும் அசோக்குமார் (கிராம உதவியாளர்) ஆகியோர்களின் முன்னிலையில் கைது செய்தேன். அன்று காலை 08.00 மணிக்கு எதிரிகளை கைது செய்தவுடனேயே அதே சாட்சிகளின் முன்னிலையில் 1 ஆம் எதிரி வெங்கடேஷ் என்கிற வெங்கிடசுப்பிரமணியம் தானாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தார். அதை நான் பதிவு செய்தேன். 1 ஆம் எதிரி என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் தன்னை அழைத்துச் சென்றால் இடத்தை அடையாளம் காண்பிப்பதாகவும், செடி புதரில் இரும்பு ராடை மறைத்து வைத்துள்ள இடத்தை காண்பித்து எடுத்து தருவதாகவும் என்னிடம் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி Ex.P.16 ஆகும். அதன்பின்பு 12 மணிக்கு எதிரி பரமசிவம்பாளையம் பிரிவு அருகில் ஒரு செடி புதர் அருகே எங்களை அழைத்துச் சென்றார். அப்போது மேற்படி சாட்சிகள் சிவாஜி, அசோக்குமார் ஆகியோர்களும் என்னோடு வந்திருந்தார்கள். மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 1 ஆம் எதிரி செடி புதரில் மறைத்து வைத்திருந்த ஒரு இரும்பு ராடு ஒன்றை

எடுத்து என்னிடம் முன்னிலைப்படுத்தினார். அதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் நான் அத்தாட்சியில் எழுதி கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல்



மகசர் Ex.P.17 ஆகும். காண்பிக்கப்படும் இரும்பு ராடைத்தான் 1 ஆம் எதிரி செடி புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அது PMO.10 ஆகும். பின்னர் எதிரியை கைப்பற்றப்பட்ட PMO.10 உடன் நிலையம் கொண்டு வந்து பின்னர் எதிரியை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பிறகு 16.8.2010 ஆம் தேதி அன்று சம்பவ இடம் சிங்காநல்லூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்பதால் உயர் அதிகாரிகளின் அனுமதியோடு வழக்கு கோப்பை சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் சம்பவ இடத்தைப் பார்த்து வரைந்த வரைபடம் Ex.P.18 ஆகும். காண்பிக்கப்படும் பார்வை மகசர் Ex.P.4 ஐ நான்தான் தயாரித்தேன். காண்பிக்கப்படும் Ex.P.5 மகசர் என்னால் தயாரிக்கப்பட்டதாகும். காண்பிக்கப்படும் PMO.3,4 ஷூக்களைத்தான் நான் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினேன். காண்பிக்கப்படும் PMO.5 வரிசை சாக்ஸுகளைத்தான் நான் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினேன். காண்பிக்கப்படும் PMO.6 இடுப்பு பெல்ட்டைத்தான் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினேன். காண்பிக்கப்படும் PMO.7 எரிந்த நிலையில் உள்ள சட்டையின் துண்டைத்தான் நான் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றினேன். காண்பிக்கப்படும் PMO.8 பேக்கிங் டேப் சம்பவ இடத்திலிருந்து என்னால் கைப்பற்றப்பட்டதாகும். எரிந்த நிலையில் உள்ள பிளாஸ்டிக் வாட்டர்கேன் PMO.9 சம்பவ இடத்திலிருந்து என்னால் கைப்பற்றதாகும். ( சாட்சி PMO.3 முதல் PMO.10 வரையான சான்றுப் பொருட்களைப் பார்த்து அடையாளம் காண்பித்து சாட்சி சொல்கிறார். ) பிரேதம் கிடந்த இடத்தை போட்டோ கிராபர் மூலம் போட்டோ எடுத்தேன். PMO.2 வரிசை போட்டோக்கள் (2 எண்ணிக்கை) சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட போட்டோக்கள் ஆகும். காண்பிக்கப்படும் PMO.1 வரிசை போட்டோக்கள் இன்ச்சார்ஜ் இன்பெக்டர் ராமதாஸிடமிருந்து வாங்கி வைத்திருந்தார். நான் ராமதாஸை விசாரித்து மேற்படி போட்டோ ராமதாஸின் அண்ணன் திரு.ராஜுவின் போட்டோ என்பதை உறுதிபடுத்திக் கொண்டேன். நான் உறுதிபடுத்திக் கொண்ட போட்டோக்கள் PMO.1 வரிசை போட்டோக்கள் (3 எண்ணிக்கை) ஆகும். சடலக்கூராய்வின்போது சேகரித்து வைக்கப்பட்டிருந்த பிரேதத்தின் மண்டை ஓட்டுடன் PMO1 வரிசை போட்டோக்களை வைத்து சூப்பர் இம்போஸ் பரிசோதனைக்காக சென்னை தடய அறிவியல் துறைக்கு 11.8.2010 ஆம் தேதி

நீதிமன்றத்தின் மூலம் அனுப்பி வைத்தேன். நான் சம்பவ இடத்தில் பிரேதத்தைக் கைப்பற்றி தயாரித்த பிரேத விசாரணை அறிக்கை Ex.P.19 ஆகும்.



## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

Ex.P.18 வரைபடத்தில் இறந்தவரின் வயது 30 எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டு இருந்த வயதை குறிப்பிட்டுள்ளேன். பிரேதம் எரிந்த நிலையில் இருந்ததால் என்னால் வயதை குறிப்பாக கண்டு உணர முடியவில்லை. Ex.P.4 பார்வை மகசரிலும் இறந்தவரின் வயது 30 எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடமான பழங்கரைக் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர் ஆவார். பொறுப்பு கிராம நிர்வாக அலுவலருக்கு எப்படி தகவல் கிடைத்தது என்பது பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் தகவலின் பேரில் பிரேதம் கிடந்த இடத்திற்குச் சென்றதாகச் சொல்லியுள்ளார். யாராது தகவலின் பேரில் சென்றார் என்பது பற்றி நான் விசாரிக்கவில்லை. யாரது தகவலின்பேரில் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலர் பிரேதம் கிடந்த இடத்திற்குச் சென்றார் என்பது பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சரியாக புலனாய்வு செய்யாமல் ஒப்புதல் வாக்கு மூலம் பதிவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

ஒம்/தெய்வேந்திரன்